
பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 28 திங்கட்கிழமை 11.05.2020 | கதிர் 55



## 863 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே. 11

கொரோனா வைரஸ் (Covid - 19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 863ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்ட 16 பேரில் 13 கடற்படைச் சிப்பாய்கள் அடங்குகின்றனர். ஒருவர் கடற்படைச் சிப்பாயுடன் நெருக்கமாகப் பழகியவர் மற்றும் டுபாயிலிருந்து நாடு திரும்பிய இருவரும் அடங்குகின்றனர்.

இதுவரை 321 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

533 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சுமந்திரனை பதவி நீக்குக!

## சம்பந்தனுக்கு நிர்மலநாதன் நேற்று அவசரமாகக் கடிதம்

**மன்னார், மே 11**

**விடுதலைப் புலிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரனின் சர்ச்சைக்குரிய கருத்து குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.**

2

## யாழில் வாள்வெட்டு; இரண்டு பேர் காயம்

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு சில மணி நேரங்களில், கமி என்றழைக்கப்படும் வாள்வெட்டுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு, மோட்டார் சைக்கிள் மற்றும் இரு முச்சக்கரவண்டிகள் ஆகியன சேதமாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், புங்கன்குளம் வீதி வழியாக இன்று பிற்பகல் 2.00 மணியளவில் 10 மோட்டார் சைக்கிளில் சென்ற கமி என்றழைக்கப்படும் வாள்வெட்டுக் குழுவினர், முத்திரைச்சந்திக்குச் சென்று அவ்விடத்தில் நின்ற 2 ஓட்டோக்களைச் சேதப்படுத்தியமையுடன், இருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். வாள்வெட்டுக்கு இலக்காகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஊரடங்கு தளர்த்தப்பட்டு சில மணி நேரங்களில், இவ்வாறான தொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சிங்களப் பேட்டியில் சுமந்திரன் கூறியவை

நான் ஆயுதப் போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாகத் தான் நான் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் ஏற்கவில்லை.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான சுமந்திரன் சிங்கள இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிங்கள செவ்வியில் கூறியிருக்கின்றார்.

2

## வவுனியாவில் இயல்பு நிலை



வவுனியா, மே. 11

கோவிட் 19 தாக்கம் காரணமாக நாடாளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று தளர்த்தப்பட்ட நிலையில் வவுனியா நகரில் மக்கள் தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

2

## மெதுவாக வழமைக்கு திரும்பும் கொழும்பு!

கொழும்பு, மே. 11

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து நடப்பதால் கொழும்பு இன்று படிப்படியாக இயங்க ஆரம்பித்தது.

2



## தமிழரசுவின் தலைமையை நிராகரிக்கிறாரா சுமந்திரன்?

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், மே. 11

தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவைசேனாதிராசாவின் தலைமையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நிராகரிக்கிறாரா என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது கட்சி அலுலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர்

2

## தேர்தல் ஆணைக்குழு சார்பில் ஆஜராக சட்டமா அதிபர் மறுப்பு

கொழும்பு, மே. 11

தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராக முடியாத நிலையில் உள்ளதாகச் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ள திகதியைச் சவாலுக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைக்கே

2

## இலங்கை இராணுவத்துடன் இணைந்து பணியாற்றியோரை நிறுத்தமாட்டோம்!

### யாழ் இராணுவத் தளபதி உறுதி



யாழ்ப்பாணம், மே 11

இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றிய இளைஞர்கள், தொழிலில் இருந்து நிறுத்தப்பட மாட்டார்கள் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தல்செவன விடுதியில் பணியாற்றியவர்கள்

2

## தேர்தல், நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான சகல மனுக்களும் வரும் திங்களன்று பரிசீலனை

### உயர்நீதிமன்றம் இன்று காலை கூடி முடிவு

கொழும்பு, மே. 11

நாடாளுமன்றத்தைக் கலைத்த அறிவிப்பு மற்றும் ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடத்தும் வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றை வெற்றும் வறிதுமாக அறிவிக்கும்படி கோரி உயர் நீதிமன்றத்தில் பல்வேறு தரப்புகளினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை வரும் திங்கட்கிழமை 18 ஆம் திகதி ஒன்றாகப் பரிசீலனைக்கு எடுப்பது என உயர்நீதிமன்றம் இன்று

2

# மன்னார் வழமைக்கு!




மன்னார், மே. 11

மன்னார் மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தின் இயல்பு நிலை சற்று வழமைக்குத் திரும்பியுள்ளது.

மக்கள் சுகாதார முறைப்படி முகக்கவசம் அணிந்து மன்னார் நகர் பகுதிக்கு வருகை தந்தனர்.

அரச, தனியார் அலுவலகங்கள் இன்று செயற்பட ஆரம்பித்துள்ளன. மன்னார் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளும் ஆரம்பமாகின.

மன்னார் நகரில் பொலிஸாரும், இராணுவத்தினரும் விசேட பாது காப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று தமக்கு தேவையான பொருள்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

## தேர்தல் ஆணைக்குழு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஆஜராக முடியாது என அவர் அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்த திட்டமி டப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை, கொரோனாவைரஸ்தாக்கம்தொடர்பான நிலையைக் கருத்திற்கொண்டு ஜூன் 20 அன்று நடத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது.

இருப்பினும், இவ்வாறு அறிவிக் கப்பட்ட திகதி அரமைப்புக்கு முரணானது என தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் பலர் அடிப்படை உரிமை மீறல் மனுக் களைத் தாக்கல் செய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் இன்னும் கட்டுப்பாட்டில் இல்லாதமை யால் தேர்தலை நடத்த உகந்த சூழல் நாட்டில் இல்லை என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக் கது.

## தமிழரசுவின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இரா.சம்பந்தன் மட்டுமே தன்னு டைய ஒரே தலைவர் என்று தெரிவிக் கும் சுமந்திரன், தமிழரசுக்கட்சியின் உறுப்பினராக இருக்கிறார் எனத் தெரி விக்கும் நிலையில் தற்போது தலைவ ராக இருக் கும் மாவை சேனாதிராசா வின் தலை மையை நிராகரிக்கிறாரா? - என்றும் சுரேஷ் கேள்வி எழுப்பி னார்.

சுமந்திரன் தமிழரசுக்கட்சிக்குள் வருவதற்கு முன்னர் தமிழீழ விடுத லைப்புலிகளுடன் இரா.சம்பந்தன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியமை யையும் அவர் சுட்டிக்காட்டியமையுடன் தமிழரசுக்கட்சியினர் ஏனைய ஆயுதக் குழுக்களுடனும் பல சுற்றுப் பேச்சுக் களை நடத்தியே கூட்டமைப்பை உரு வாக்கினர் எனவும் தெரிவித்தார்.

## சுமந்திரனை பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவியை அவரிடமி ருந்து பறித்து வேறு நபர்களுக்கு வழங்க வேண்டும் என்று அவர் அந்தக் கடிதத் தில் கோரியுள்ளார்.

இது குறித்து சாள்ஸ் நிர்மலநாதன் இரா. சம்பந்தனுக்கு எழுதியுள்ள கடிதத் தில் -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழரின் இன விடுதலைக் காக அதியுச்ச தியாகங்களைச் செய்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ச்சியாக கூறி வருகின்றார்.

இவ்விடயம் தொடர்பாக நாடாளு மன்ற குழுக் கூட்டத்தில் பல தடவை என் னால் சுட்டிக்காட்டப்பட்டதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்த விடயம் தொடர்பாக இனிமேல் கதைக்கவேண்டாம் என்றும் என்னால் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால் 08.05.2020 அன்று ஒரு சிங்கள ஊடகத்துக்கு இதே போன்று கருத்து கூறியிருக்கின்றார்.

இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருப்பினும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கும் காரணத்தால் தமிழ் மக்கள் மிகவும் கோபம் அடைந்துள்ளனர்.

நானும் அவருடைய கருத்தை எதிர்க்கின்றேன். சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கூறும் கருத்துக் களை நிறுத்தவேண்டும்.

அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஊடகப் பேச்சாளர் பதவியை அவரிட மிருந்து பறித்து வேறு நபர்களுக்கு வழங்கவேண்டும்.

இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தி யகுழுக் கூட்டத்தைக் கூட்டும்படி கேட்டுக் கொள்கிறேன் - என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

## தேர்தல், நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை முடிவு செய்தது. அவற்றின் மீது 18,19 ஆம் திகதிகளில் விசாரணை நடத்துவது என்றும் அது தீர்மானித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் முர்து பெர்னாண்டோ, துரைராஜா ஆகியோரைக் கொண்ட ஆயம் இத்தீர்மானத்தை எடுத்தது.

இந்த மனுக்களில் ஒன்று மட்டும் இன்று காலை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இதுபோன்ற ஏழுக்கும் மேற்பட்ட மனுக்கள் உயர்நீதிம ன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்று மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சுமந்திரன் கூறினார்.

இவை அனைத்தையும் ஒரேசம யத்தில் எடுக்க வேண்டும் என அவர் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்த மனுக்களை ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன்பாக விசாரிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பும், அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணியும் வெளிப்படுத்திய கருத்தைக் குறித்துக் கொண்ட பிரதம நீதியரசர் இது தொடர்பில் தாம் உரிய முடிவை எடுத்து அறிவிப்பார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இன்றைய வழக்கில் ஜனாதிபதி யின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ரூமேஷ் டி சில்வா வும் -

சட்டமா அதிபர் மற்றும் ஜனாதிபதி யின் நலனைக் கவனிப்பதற்காக மேலதி க சொலிஸிட்டர் ஜெனரல் சிந்திகா தேமுனி டி சில்வாவும், எதிர்மனுதாரர்களுள் ஒருவரான தேர்தல் ஆணையாளர் ரட்ணஜீவன் கூல் சார்பில் சட்டத்தரணி அஸங்க தேவேந்திரவும் முன்னிலை யாகினர்.

## வவுனியாவில் இயல்பு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள அரச திணைக் களங்களில் ஊழியர்கள் கடமைக்கு திரும்பியிருந்தமையுடன் மக்களும் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக அரச திணைக்களங்களை நோக்கி வருகை தந்திருந்தனர்.

குறிப்பாக முதியோர்கள் தமது கொடுப் பனவை பெற்றுக்கொள்வதற்காக தபால் நிலையங்களில் வரிசையில் நின்று தமது சேவைகளைப் பெற்றனர். வங்கிக ளுக்கும் அதிகளவான மக்கள் வந்தி ருந்தனர்.

இதேவேளை, பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வாயி லில் கைகளைக் கழுவிச் செல்வதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டிருந்தன.

வவுனியா மொத்த வியாபார மரக்கறி சந்தையின் செயற்பாடுகள் வழமை போல இடம்பெற்றன. ஏற்கனவே பிரத்தி யேகமாக ஒதுக்கப்பட்ட இடங்களிலும் மரக்கறி விற்பனை இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சேவை யின் வவுனியா சாலையினால் உள்ளூர் சேவைகள் இன்று மேற்கொள்ளப்பட்டன. மன்னார், முல்லைத்தீவு, யாழ்பாணம் போன்ற மாவட்டங்களுக்கும் மட்டுப்ப டுத்தப்பட்ட சேவைகள் மாத்திரம் இடம் பெற்றன.

இதேவளை நகரில் அமைந்துள்ள புடைவை வியாபார நிலையங்கள் மற் றும் சலூன்கள் இன்று மூடப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## மெதுவாக வழமைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய சேவைகள் பல இடங்களில் ஆரம்பமாகின. ஆனாலும் முழுமையாக மக்கள் நடமாட்டத்தைக் காண முடியவில்லை. தேவைகள் நிமித்தம் பயணிப்பவர்களை மட்டுமே காணமுடிந்தது.

## இலங்கை இராணுவ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி மாற்றத்தின் பின்னராக பணி யிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார்களா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் தெரிவிக்கையில் -

அது முற்றிலும் பொய்யான செய்தி. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பாது காப்புச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில்தான், தமிழ் இளைஞர், யுவதி களை - குறிப்பாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை - இராணுவத் திற்கு இணைத்துக் கொண்டார்.

2011ஆம் ஆண்டில்தான் தமிழ் இளைஞர்களை இராணுவத்துடன் இணைந்து செயலாற்ற - சேவையாற்ற - இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட வர்களும் புனர்வாழ்வு பெற்று இராணு வத்துடன் இணைந்து சேவையாற் றினார்கள். பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது அவர் ஏற்படுத்திய திட் டத்தை நோக்கத்தை தற்போது ஜனாதி பதியாக அவர் பதவிவகிக்கும் இந்த நேரத்தில் அதனை உதாசீனம் செய்து விடும் எந்த நோக்கமும் கிடையாது.

மக்களுடன் இருக்கும் தொடர்பை இல்லாமல் செய்யும் செயலை நாம் ஒருபோது செய்யப்போவது கிடையாது. தல்செவன விடுதியில் பணியாற்றியவர் கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றார்கள்.

வைரஸ் பரவலை அடுத்து யாரும் விடுதிகளில் தங்க விரும்பாத காரணத் தினால், நாட்டின் அனைத்து விடுதி களும் மூடப்பட்டிருக்கின்றன.

தனியார் துறை சிலவற்றில் நிரந்தர மாக பணியாற்றியவர்கள் தவிர்ந்த தற்காலிகமாக பணியாற்றியவர்களை இரண்டு மாத ஊதியத்தினை வழங்கி அவர்களது சேவையை இந்தக் காலப் பகுதியில் இடைநிறுத்தியிருக்கின்றோம்.

மீண்டும் நிலைமை வழமைக்கு திரும்பியதும் உடனடியாகவே அவர் களை சேவைக்கு இணைத்துக் கொள் வதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார்.

## சிங்களப் பேட்டியில் சுமந்திரன்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சிங்கள இணைய ஊடக நேர் காணலை யாழ் ஊடகம் ஒன்று துண்டு களாக மீள் ஒளிபரப்பு செய்தது. அது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த நேர்காணலின் சில கேள்வி - பதில்களை இயன்றவரை செப்பமாக மொழிபெயர்த்து இங்கு தருகின்றோம். (முழுமையான நேர்காணல் சுமந்திர னின் முகப்புத்தகத்தில் பகிரப்பட்டுள்ளது.)

கேள்வி :- நீங்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் ,ஆயுதப்போராட் டத்தை ஏற்றுக் கொள்கின்றீர்கள்...!

பதில் :- இல்லை. ஏற்றுக்கொள்ள வில்லை.

கேள்வி :- ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?

பதில் :- ஒருபோதும் இல்லை. இதை நான் யாழ்ப்பாணத்திலும் சொல்லியிருக் கிறேன். ஏனைய பிரதேசங்களிலும் சொல்லியிருக்கிறேன். "ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை?எமக்காக போராடிய வர்கள்!" என எனக்குக் கடும் எதிர்ப்பும் வந்து இருக்கின்றது. அதனை ஏற்றுக் கொள்ளாதற்கு காரணம் நான் ஆயுதப் போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஏற் றுக் ஏற்றுக்கொண்டவனல்லன் என்பது தான்.

கேள்வி:- நீங்கள் தனி நாட்டுக் கொள்கை பிரிவினைவாதத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

பதில்:- ஒருபோதும் இல்லை.

கேள்வி:- நீங்கள் ஒன்றாக இருக்க வேண்டுமென நினைக்கின்றீர்களா?

பதில் :- ஒன்றாக இருக்கவேண்டும். ஆனால் எல்லா இன மக்களுக்கும் உரி மைகள் வழங்கபட வேண்டும் .அரச அதிகாரங்களை அனைவரும் உபயோ கிக்க வேண்டும்.

கேள்வி :- அப்படியென்றால் ஏன் தமிழ் தேசிய கூட்டமைப்பு சமஷ்டியை கேட்கின்றது?

பதில் :- ஆம் நாம் கேட்கின்றோம். சமஷ்டி மூலமாகன் அனைத்து இன மக்களுக்கும் அரசு அதிகாரத்தை பயன் படுத்தும் உறுதியை வழங்க முடியும்.

கேள்வி : - சமஷ்டி என்றதும் தனி நாடு. நாடு பிரியும் அல்லவா ?

பதில் :- அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய நாடுகள் சில சமஷ்டி முறையைப் பின்பற்றுகின்றனர். அங்கு நாடுகள் பிரிந்தனவா? அவை சக்திமிக்க நாடுகள். அங்கு சமஷ்டு இருப்பதனா லேயே அந்த நாடுகள் சக்தி மிக்க நாடு களாக இருக்கின்றன.

கேள்வி:- சிங்கள மக்களுடன் பகைமை கொள்கின்றீர்களா ?

பதில் :- இல்லை நான் ஐந்து வயது முதல் கொழும்பில் வாழ்கிறேன். எனக்கு சில நண்பர்கள் உள்ளனர். நான் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்வதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

கேள்வி :- தெற்கில் இப்படி கதைத்து விட்டு, வடக்கில் பல்வேறு கதைகள் கூறுவீர்கள். அங்கு அப்பாவி தமிழ் மக் களை உசுப்பெற்றுவீர்கள் ?

பதில்:- நான் அப்படிசெய்வதில்லை. நான் அவ்வாறு செய்வதில்லை என்று தான் ஒரு பகுதியினர் என்னோடு கோபிக் கின்றனர். - என்றார்

சிங்கள மொழியில் ஓர் இனவாத கோணத்தில் கேட்கப்பட்ட பல கேள்விக ளுக்கும் சுமந்திரன் புன்னகையுடன் பதிலளித்தார்.

இந்தப் பேட்டியில் 2000ஆம் ஆண்டின் முதல் தசாப்தத்தில் தமது கட்சி விடுதலைப் புலிகளோடு சேர்ந்து செயற்பட்டது என் றும் அச்சமயத்தில் இலங்கை அரசுகளும் கூட புலிகளுடன் பேச்சு நடத்தின என்றும் அவர் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தல் ஆணையார்களின் முரணிலை

இலங்கையின் தற்போதைய அரசியல் செல்நெறியில் தீர்க்கமான ஒரு மாற்றத்தைக் கொண்டு வரக் கூடிய வாய்ப்புள்ள விடயமாக எதிரணிகள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நோக்கப் படுகின்றன.

இவற்றில் ஒரு மனுத் தொடர்பான பூர்வாங்க விசாரணை இன்று காலை உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் எடுக்கப்பட்ட போது முக்கிய சில விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

அதில் முக்கியமானது சட்டமாஅதிபர் மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்திகா தேமுனி டி சில்வா குறிப்பிட்ட விடயம்.

நேற்று இப்பத்தியில் எழுப்பிய கேள்விக்கு அவர் இன்று காலை நீதிமன்றத்தில் பதில் கொடுத்திருக்கின்றார்.

மேற்படி மனுக்கள் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது எல்லா மனுக்களிலும், தனித்தனிப் பெயர் சுட்டி எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணையத்தின் ஆணையாளர்கள் மூவரின் சார்பிலும் சட்ட மா அதிபர் முன்னிலையாவாரா? அல்லது தேர்தல் ஆணையாளர்கள் தத்தமது சார்பில் தனித் தனி சட்டத்தரணிகள் மூலம் முன்னிலையாவார்களா என்று நாம் இப்பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தோம்.

அதற்கு சூசகமாக ஒரு பதிலையும் கூட வரிகளுக்கு இடையில் குறிப்பிட்டிருந்தோம்.

"தேர்தல்கள் ஆணையாளர்களில் ஒருவரான ரட்ணஜீவன் கூல் பொதுவாக சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் தம் எண்ணப்படியும் செயற்படுபவர்; கருத்து வெளியிடுபவர். ஆகவே சட்ட மா அதிபர் என்ற அரச தரப்புக்குள் கட்டுப்படாமல் சுதந்திரமாக நீதிமன்ற விடயத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க விரும்புவார். எனவே இந்த வழக்குகளில் தமக்குத் தாமே பதில் மனுத் தாக்கல் செய்து, தனித்துவமான சட்டத்தரணி மூலம் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகக் கூடும்" - என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதை உறுதிப்படுத்துமாற் போல இன்று நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்திகா தேமுனி டி சில்வா, தேர்தல்கள் ஆணையாளர்கள் மூவர் சார்பிலும் சட்ட மா அதிபர் முன்னிலையாக மாட்டார் என்றும், அம் மூவரும் தத்தமக்குரிய சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்தில் தோற்றுவர் என்றும் அறிவித்தார்.

அதேசமயம், நாம் குறிப்பிட்டபடி ஆணையாளர் கூல் இன்று நீதிமன்றத்தில் அஸங்க தேவேந்திர என்ற சட்டத்தரணி மூலம் தனது தரப்புப் பிரசன்னத்தைப் பதிவு செய்தார். ஆனால் மற்றைய இரு ஆணையாளர்கள் சார்பிலும் எவரும் முன்னிலையாகவில்லை.

தேர்தல் ஆணையாளர்கள் மூவரும் இந்த வழக்குகள் தொடர்பான விவகாரத்தில் ஒரே மாதிரியான, ஒரே நிலைப்பாட்டைத் தங்கள் தீர்மானமாக எடுத்து, அதனை சட்ட மா அதிபருக்கு அறிவிப்பார்களாயின் அவர்கள் பிரதிபலிக்கும் நிலைப்பாட்டைத் தேர்தல் ஆணையம் சார்பில் நீதிமன்றத்தில் சட்டமாஅதிபர் எடுப்பார் என்றும் -

அப்படி இல்லாமல் இந்த வழக்குகள் தொடர்பான நீதிமன்ற விடயத்தில் வெவ்வேறான கருத்து நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தால் தம்மால் இவ் வழக்குகளில் முன்னிலையாக முடியாது என்றும் -

சட்ட மா அதிபரினால் தேர்தல் ஆணையர் மூவருக்கும் அறிவுறுத்தல் வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

மேற்படி மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களுக்குள் ஒற்றைப்பட்ட நிலைப்பாட்டுக்கு வர முடியாத நிலை இருப்பதாகத் தேர்தல் ஆணையாளர்கள் மூவர் சார்பிலும் கோடி காட்டப்பட்டதை அடுத்தே இந்த வழக்குகளில் தேர்தல் ஆணையாளர்கள் சார்பிலும் முன்னிலையாகும் கடப்பாட்டிலிருந்து சட்ட மா அதிபர் விலகிக் கொண்டார் என்றும் -

அது பற்றிய அறிவுறுத்தல் நேற்றுத்தான் தேர்தல் ஆணையாளர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டமையால் இன்றைய நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தமது பிரத்தியேக சட்டத்தரணியை மற்ற இரு ஆணையாளர்களினாலும் ஒழுங்குபடுத்த முடியாமல் போயிற்று என்றும் -

எனினும், ஏற்கனவே தன்னுடைய தனித்துவ நிலைப்பாட்டைத் தனித்தே நீதிமன்றத்தில் வெளிப்படையாகத் தெரிவிப்பது என்ற முடிவில் அதற்கான ஆயத்தங்களை செய்திருந்த ஆணையாளர் இரட்ணஜீவன் கூல் அதன்படி இன்றைய தவணைக்குத் தமது சட்டத்தரணியை நீதிமன்றத்தில் முன்னிலையாக வைத்தார் என்றும் - அறியவந்தது.

ஆக, இந்த வழக்குகளில் தேர்தல்கள் ஆணையாளர்கள் மூவரும், தனித்து வெவ்வேறான நிலைப்பாடுகளைத் தமக்கேற்றவாறு எடுத்து, பெரும்பாலும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கக் கூடிய அந்த நிலைப்பாடுகளையே நீதிமன்றத்தில் பிரதிபலிக்கப் போகின்றார்கள் போல தென்படுகின்றது.

நாம் நேற்று இப்பத்தியில் சுட்டிக் காட்டியபடி தேர்தல் ஆணையாளர்கள் மூவருக்கும் இடையிலான சிக்கல், பிய்ச்சல், பிடுங்கலுக்குத் தீர்வு காண்பதும் - தீர்ப்புக் கூறுவதும் - இந்த வழக்குகளில் உயர் நீதிமன்றத்தின் மேலதிகக் கடப்பாடாகப் போகின்றதுதான் போலும்.

# சுமந்திரன் வெளியிட்ட கருத்துகள் கூட்டமைப்பின் நிலைப்பாடல்ல!

## தமிழரசுத் தலைவர் மாவை விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள், ஆயுதப் போராட்டம் ஆகியன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதனை விளக்கி அவர் இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

10-05-2020 முதல் விடுதலைப்புலிகள் பற்றி சுமந்திரன் பேட்டியில் சிங்கள மொழியில் வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிராக எம்மிடம் கண்டனங்களும் விமர்சனங்களும் தெரிவிக்கப் படுகின்றமையால் இந்த அறிக்கையை வெளியிட வேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கமும் ஆயுதப் போராட்டம் தொடர்பில் திரு. சுமந்திரன் தெரிவித்த கருத்தின் மீது கண்டனம் தெரிவித்துள்ளது. அதுபோல (புளொட்) தமிழீழ விடுதலைக் கழகமும் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

சிங்கள ஊடகத்தில் விடுதலைப் புலிகள் தொடர்பில், விடுதலைப் புலிகளையும், ஆயுதப் போராட்டங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று திரு. சுமந்திரன் வெளியிட்ட கருத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் தனிப்பட்ட கருத்தாகவும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

1976 மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு நடைபெற்றது. தமிழர் இழந்த சுதந்திரத்தை மீட்க (சுதந்திரத் தமிழீழம்) வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது நாம் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தவர்கள். 1971இல் ஆட்சியைக் கைப்பற்ற ஆயுதப் புரட்சி செய்த ஜே.வி.பியினர் ஆயிரக்கணக்கில் அச்சிறைகளில் இருந்தனர்.

1977 பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆணை கேட்டு பெரு வெற்றி பெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழின விடுதலைக்காக 1971, 1972களில் உருவாகியது. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஏற்று ஆயுதப் போராட்டத்தின் மூலம் அந்தச் சுதந்திரத்தை அடைய வேண்டுமென்று இயங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் ஒருபொழுதும் பங்காளிகளாக இருந்ததில்லை.

1983 ஜூலைக் கலவரத்தின் பின் இந்திய நாட்டின் தலையீடும், அனுசரனையும் இடம் பெற்ற பேச்சுகள் இந்தியாவில் புதுடெல்லியில் இடம்பெற்ற வேளைகளில் பேச்சுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2001 - 2002 காலப்பகுதியில் நோர்வே அனுசரனையுடன் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் பேச்சு ஆரம்பித்தது. 2002 டிசம்பரில் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்தனர்.

2002 பெப்ரவரியில் நோர்வே ஒஸ்லோ நகரில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மிடையில் பேச்சுக்கு ஒரு உடன்பாடு எட்டப்பட்டது அந்த வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் சர்வதேசத்திற்கு முன் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சு நடத்தி இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வேளையிலிருந்துதான் சர்வதேசத்தின் முன்னிலையில் தமிழர்களின் உச்ச அரசியல் பலம் ஏற்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளும் தொடர்ச்சியான பேச்சுக்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற ஆயுதப் போரும், போர் நிறுத்தமும், சர்வதேச அரங்கில் இலங்கை அரசுடன் ஒஸ்லோவில் பேச்சு நடத்த உடன்பட்ட காலத்தில் ஜனநாயகக் கோட்பாட்டில் இயங்கி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அப்பேச்சில் பங்கு கொண்ட விடுதலை ப்புலிகளை அங்கீகரித்து நின்ற காலத்திலிருந்துதான் இலங்கை இனப்பிரச்சினை சர்வதேசத்திலும் அரசியல் விடுதலைப் பரிணாமத்தைப் பெற்றது.

அந்த ஒஸ்லோ உடன்படிக்கையின் அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் அறிக்கைகளையே 2004 முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுத் தேர்தல்களில் பெரு வெற்றி பெற்று வருகிறது. 2004 பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2009 போர் முடிந்த பின் 2010 பொதுத் தேர்தலிலும் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றி பெற்றது. 2011 ஒக்டோபர் 24முதல் 27 வரை அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அழைப்பின் பேரில் வொசிங்டனில் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அமெரிக்க இராஜாங்க அமைச்சுடன் பேச்சில் ஈடுபட்டனர். இறுதியில் 2012 மார்ச்சில் நடைபெறவிருந்த ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய இலங்கை அரசுக்கெதிரான போர்க்குற்ற விசாரணைக்கான பிரேரணை தயாரிக்கப்பட்டது. தமிழின விடுதலைக்கான போர் இலங்கை அரசு இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப. புலிகளுக்கு இடையிலேயே நடைபெற்றது.

2011 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில், 2013 மாகாணசபைத் தேர்தல்களில், 2015 பொதுத் தேர்தல்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் போராளிகள், ஆதரவாளர்களின் ஆதரவுடனேயே வெற்றிகள் ஏற்பட்டன.

ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயுத மேந்திப் போராடிய இயக்கத்தினர், போராளிகளின் வழக்குகளில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் , நீலன் திருச்செல்வம் முதலான பல வழக்கறிஞர்கள் வாதாடியிருந்தனர்.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட காலத்தில் இந்தியக் காங்கிரஸ் அமைப்புக்களில் ஜவர்கலால் நேரு, சுபாஸ் சந்திர போஸ் முதலான தலைவர்களிருந்தனர். மகாத்மா காந்தி காங்கிரஸில் இடம்பெறவில்லையாயினும் அவர் ஆதரவும் தலையீடுகளும் இருந்தன. ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களைக் கொன்ற ஆஷ் துரையை கொன்ற பகவத்சிங், உத்தம சிங் முதலானோர் கைதுசெய்யப்பட்டு கராச்சி நீதிமன்றத்திலே தூக்குத்தண்டனை வழங்க வேண்டுமென்ற வழக்கில் ஜவர்கலால் நேரு தோன்றி பகவத்சிங் முதலானோரை விடுதலை செய்ய வேண்டுமென வாதாடினார்.

தூக்குத் தண்டனைக்கு எதிராக மகாத்மா காந்தி இங்கிலாந்து வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் மகாத்மா குறிப்பிட்டார். பகவத்சிங் முதலானோரின் போராட்ட வழிமுறையை நான் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், அவர்கள் தியாகத்தை மதிக்கிறேன். அவர்களைத் தூக்கிலிட வேண்டாம் என்று கேட்டிருந்தார். இலங்கையிலும் எங்கள் வழக்கறிஞர்களும் ஜவர்கலால்நேரு, மகாத்மா காந்தி போலவே நடந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழீழ விடுதலை அமைப்புப் போராளிகளை போரினால் பாதிப்புற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களை தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைத்துத் தமிழ்ச் சமூகத்தின் விடுதலை இயக்கத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கைத் திட்டத்தையே கொண்டு செயல்படுகிறது. ஆரம்பத்தில் சென்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் போராளிகள் பங்கு கொண்டிருந்தனர்.

எனவே தென்னிலங்கையில் பௌத்த சிங்கள ஒற்றையாட்சி, பெரும்பான்மைத்துவ ஆட்சிச் சித்தாந்தத்துடன் எழுச்சி பெற்று வரும் அரசியல் இராணுவச் சூழ்நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள், அரசியல், சமூக அமைப்புக்கள் ஒன்றுபட்டு எழுச்சி பெற வேண்டியதே இன்று வேண்டியதாகும். ஜனநாயக அரசியலில் அதுவும் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்து நிற்கும் மக்களிடம் கருத்து வேற்றுமைகளில் இணக்கத்தை உருவாக்கிப் பிளவுகளுக்கு இடமளிக்காமல் நம்பிக்கையை ஏற்படுத்துவதே சிறப்பானதாகும். விரைவில் தமிழரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகள் ஒன்று கூடி மேற்கொண்டு செயல்படவேண்டிய தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனக் கருதியுள்ளோம் - என்றுள்ளது.

# ராஜஸ்தானில் ஒரு கிராமத்தில் எல்லோருக்கும் 2 மனைவிகள்!



ஜெய்ப்பூர்,மே11

ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு கிராமத்தில் அனைத்து ஆண்களுக்கும் இரண்டு மனைவி. ஒரு கிராமத்தின் வினோதப் பழக்கமாக இது கடைபிடிக்கப்படுகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தின் பார்மர் மாவட்டம் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது. இந்த பகுதியில் தேரசர் என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் சுமார் 600 பேர் குடியிருந்து வருகின்றனர். பல ஆண்டுகளாக அவர்கள் அந்த பகுதியில்தான் வசித்து வருகின்றனர். அவர்களிடம் ஒரு வித்தியாசமான பழக்கம் இருக்கிறது. அதை அந்த கிராம மக்கள் அனைவரும் பின்பற்றி வருகின்றனர்.

அந்தக் கிராமத்தில் உள்ள திருமணமான அத்தனை ஆண்களுக்கும் இரண்டு மனைவிகள் இருக்கிறார்களாம். இது ஒன்றும் அவர்கள் பின்பற்றும் மத சடங்கு இல்லை. இந்த பகுதியில் வாழும் மக்களின் கலாச்சாரம். இது மதங்களை கடந்து அனைவரிடமும் இருக்கிறது. அப்பகுதியில் 70 முஸ்லிம் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களும் இதே பழக்கத்தைத்தான் பின் பற்றுகின்றனர்.

அந்த ஊரில் வாழும் ஆண்கள் திருமணம் செய்ய விரும்பினால் முதல் மனைவியை திருமணம் செய்த பிறகு கட்டாயம் இரண்டாவது மனைவியையும் திருமணம் செய்ய வேண்டுமாம். ஏன் என்றால் தனியே முதல் மனைவி மட்டும் என்றால் குழந்தையே பிறக்காது எனக் கூறப்படுகிறது.

அதனால் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் யாரும் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டு அவர் மூலமே குழந்தையை பெற்றுக்கொள்கின்றனர். பலர் தனது முதல் மனைவியின் மூலம் குழந்தை பெற்றுக்கொள் முயற்சித்தும் முடியவில்லை எனவும் கூறப்படுகிறது.

கிராமத்தில் நிறைய பேர் தங்கள் முதல் மனைவியுடன் ஒரு குழந்தையைப் பெறுவதற்காக தங்கள் வாழ்க்கையின் கிட்டத்தட்ட பாதி வரை காத்திருக்கிறார்கள். அத்தகைய ஆண்கள், மீண்டும் திருமணம் செய்துகொண்டபோது, குழந்தைகளைப் பெறுகிறார்கள். ஒருவர் இரண்டு முறை திருமணம் செய்து கொள்ள ஒரே காரணம் இதுதான். இந்த கிராமத்தின் சிறப்பு என்னவென்றால், முதல் மனைவி தனது கணவரின் இரண்டாவது மனைவியுடன் பொறாமை அல்லது பாதுகாப்பற்ற தன்மையை உணருவது இல்லை.

ஒருவர் இரண்டாவது முறையாக திருமணம் செய்த பின் மூன்று குழந்தைகளைப் பெற்றார்.

கிராமத்து பெண்கள் குடிதண்ணீரைச் சேகரிக்க ஒவ்வொரு நாளும் 5 கிலோமீட்டருக்கு மேல் மலையேற வேண்டும். கர்ப்பமாகிவிட்ட பிறகு ஒரு பெண் தண்ணீர் எடுக்க இவ்வளவு தூரம் நடக்க முடியாது. எனவே, அவரது கணவர் வேறொரு பெண்ணை மணக்கிறார், இதனால் வீட்டு வேலைகளை நடத்தி தண்ணீர் கொண்டு வரலாம். இது கிராமங்களில் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது

# சென்னையில் 2 பேர் சாவு

சென்னை ராஜீவ்காந்தி அரச மருத்துவமனையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்த இருவர் இன்று உயிரிழந்தனர்.

தமிழகத்தில் நேற்று 669 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 7,204 ஆக அதிகரித்துள்ளது.

இதில் சென்னையில் நேற்று மட்டும் 509 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதுடன் மாநிலத்திலேயே சென்னையில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தமாக 3,839 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இந்நிலையில் சென்னை ராஜீவ்காந்தி அரச மருத்துவமனையில் கொரோனாவுக்கு சிகிச்சைப் பெற்று வந்த சென்னை கொளத்தூரைச் சேர்ந்த 67வயதான ஆண் ஒருவரும், திருவல்லிக்கேணி பகுதியைச் சேர்ந்த 64 வயதான பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து சென்னையில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது. தமிழக அளவில் கொரோனாவுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 49ஆக அதிகரித்துள்ளது.

# முலாயம் சிங் யாதவ் மருத்துவமனையில்!



உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாதி கட்சி நிறுவனருமான முலாயம் சிங் யாதவ் உடல்நலக் கோளாறால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டமையை அடுத்து லக்னோவிலுள்ள மேதாந்தா மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். ஏற்கனவே கடந்த 6 ஆம் திகதி அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அது வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்கானது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அடுத்த 5 நாட்களுக்குள் முலாயம் சிங் யாதவ் 2 ஆவது முறையாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார். அவர் பூரண நலன் பெற வேண்டும் என தாம் பிரார்த்திக்கிறார் என மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகானும் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

# கிராமத்தவரை வீட்டுக்குள் முடக்கும் ஒடிஸா மாநிலத்தின் பெண் பேய்கள்!

புவனேஸ்வர்,மே11

ஊரடங்கில் மக்கள் வெளியே சுற்றுவதைத் தடுக்க ஒடிசா மாநில கிராமங்களில் பொலிஸார் பெண்களைப் பேய்களாகவேடமணியவைத்து பயமுறுத்திவருகிறார்கள்.

இந்தியா முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 62 ஆயிரத்து 939 ஆகவும், உயிரிழப்பு இரண்டாயிரத்து 109 ஆகவும் அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், ஆபத்தான வைரஸ்கள் பரவுவதை கட்டுப்படுத்த அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. விழிப்புணர்வை ஏற்படுத்த இந்திய காவல்துறையும் மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்க அவர்கள் புதுமையான முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

கொரோனா ஹெல்மெட் அணிந்த பொலிஸார், கொரோனா போல் வேடமணிந்த பொலிஸார் எனப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர்

இப்போது, கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தீவிரம் குறித்து விழிப்புணர்வை பரப்பும் முயற்சியில், ஒடிசா கிராமத்தில் உள்ளவர்கள் தெருக்களில் நடமாடுவதை தடுக்க 'பேய்' என்று பயங்காட்டி வருகின்றனர்

கிராம பஞ்சாயத்தைச் சேர்ந்த பெண்அலி சுண்ணாம்பு - வெள்ளை தோலுடன் பேயாக உடை அணிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறுபவர்களை பின் தொடர செய்து பயமுறுத்துகிறார்கள்



இந்தப் 'புடவை அணிந்த பெண்' மக்கள் வீட்டில் தங்குவதை உறுதி செய்வதற்காக இரவு முழுவதும் சுற்றித் திரிகிறார்கள், இதனால் யாரும் வெளியேறுவதில்லை, இதனால் நோய் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும்

ஒடிசாவில் தற்போது வரை பதிவான மொத்தத் தொற்றுகளின் எண்ணிக்கை 294 ஆகும், அவற்றில் 63 குணமாகி 2 மரணங்கள் பதிவாகியுள்ளன.

# இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு தூபமிடுகின்றதாம் பாகிஸ்தான் உளவு அமைப்பு

புதுடெல்லி,மே11

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட பயங்கரவாதக் குழு லஷ்கர் - இ - தொய்பா ஜம்மு - காஷ்மீர் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்த சதித்திட்டமிட்டு உள்ளது. உளவுத்துறை வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட லஷ்கர்- இ - தொய்பா பயங்கரவாத இயக்கத்துடன் தாவூத் இப்ராஹிம் கைகோர்த்துள்ளார் எனவும், தாவூத் பாகிஸ்தானில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது பண்ணை வீட்டில் காணப்பட்டதாகவும் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. அமைப்பு அதிகாரிகளுடன் தாவூத் மற்றும் லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாத தலைவர்களுடனான சந்திப்பு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

கொரோனா வைரஸ், கொரோனா அச்சுறுத்தலைத் தோற்கடிப்பதில் முழு நாடும் கவனம் செலுத்துகின்ற



நேரத்தில் ஐ.எஸ்.ஐ.,இந்தியாவில் அமைதியின்மையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், இன்று திங்கள்கிழமை (மே 11) நடைபெறும் ரம்ஜானின் 17 ஆவது நாளுக்காக காஷ்மீரில் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் இந்த நாளைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

# இந்தியாவில் ஒரே நாளில் 4213 பேருக்கு கொரோனா

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 67 ஆயிரத்தை கடந்துள்ள நிலையில், 2206 பேர் இந்த வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

மத்திய சுகாதாரத்துறை இன்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள தகவலின்படி, கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் 4213 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 97 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதற்கமைய கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 67,152 ஆக அதிகரித்துள்ளது. மேலும் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2206 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை, 20917 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர் என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவில் மருத்துவமனையில் தீயில் சிக்கி 7 பேர் உயிரிழப்பு

கிராஸ்னோகார்ஸ்க்,மே 11

ரஷ்யாவில் தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 7 பேர் பலியாகி உள்ளனர்.

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் கிராஸ்னோகார்ஸ்க் என்ற பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையின் 2 ஆவது தளத்தில் நேற்றிரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டு உள்ளது. சம்பவத்தின்பொழுது அந்த கட்டடத்தில் 29 பேர் இருந்துள்ளனர். அவர்களில் பலர் வயது முதிர்ந்த படுக்கையில் இருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் ஆவர்.

தீ விபத்து ஏற்பட்டவுடன், உடனடியாக 11 பேர் அந்த கட்டிடத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். தெய்வாதீனமாக தீ விபத்தின் பொழுது அந்தக் கட்டடத்தில் குழந்தைகள் யாரும் இல்லை.

இதனை அடுத்து தகவல் அறிந்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ பகுதிக்கு வந்தனர். அவர்கள் தொடர்ந்து மீட்பு பணியில் ஈடுபட்டு 7 பேரின் உடல்களை மீட்டு உள்ளனர். இந்தத் தகவலை அந்நாட்டின் அவசரகால சேவைக்கான செய்தி தொடர்பு அதிகாரி ஒருவர் இன்று காலை செய்தியாளர்களிடம் கூறினார்.



## வற் வரியை மூன்று மடங்கு உயர்த்தும் சவூதி அரேபியா

சவூதி அரேபிய அரசு, வற் வரியை மூன்று மடங்கு உயர்த்தியுள்ளதோடு, வாழ்க்கைச் செலவுகளுக்கான படி வழங்குவதையும் நிறுத்திவைக்கிறது.

மசகு எண்ணெய் விலை கடும் வீழ்ச்சி, கொரோனாக் கட்டுப்பாடுகளால் பொருளாதார செயல்பாடுகள் முடக்கம், கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான செலவு என மும்முனைத் தாக்குதலை சவூதி அரேபியப் பொருளாதாரம் எதிர்கொண்டு வருகிறது. முதல் காலாண்டில் 9 பில்லியன் டொலர்கள் அளவுக்கு பட்ஜெட் பற்றாக்குறை விழுந்துள்ளது.

இந்நிலையில் சிக்கன நடவடிக்கைகளை சவூதி அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வாழ்க்கைச் செலவுகளுக்கான படி வழங்குவது ஜீன் முதல் நிறுத்தி வைக்கப்படுகிறது. வற் வரி ஜீலை முதல் 5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

## இங்கிலாந்தில் பொதுமுடக்கம் ஜீன் 1 வரை நீடிப்பு என அறிவிப்பு

இங்கிலாந்தில் பொதுமுடக்கம் ஜீன் மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்படும் என அந்நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

பொதுமுடக்கத்தை நீடிப்பது குறித்துதகவல் வெளியிட்ட அவர், இங்கிலாந்துக்கு வரும் வெளிநாட்டினரை தனிமைப் படுத்தி வைக்கும் திட்டத்தையும் அறிவித்தார்.

ஊரடங்கின் காரணமாகத் தங்கள் வாழ்க்கைக்கு மிகப்பெரிய விலையைக் கொடுத்துள்ளோம் எனக் கூறிய அவர், இங்கிலாந்தில் ஜீன் முதலாம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுவதாக அறிவித்தார்.

மேலும் ஜீலை மாதம் முதலாம் திகதி முதல் நாட்டின் சில பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு, மக்கள் கூடும் பொது இடங்கள் திறக்கப்பட உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.



## சீனாவில் கொரோனா நோயாளிக்கு நுரையீரல் மாற்று சிகிச்சை வெற்றி




உலகில் முதல் முறையாக, சீனாவில், மூளைச்சாவு அடைந்தவரின் நுரையீரல் தானமாக பெறப்பட்டு, கொரோனாவால் பாதிக்கப்பட்டவருக்கு பொருத்தப்பட்டது.

கொரோனாவின் தாயகமாகக் கருதப்படும் வுகான் நகரை சேர்ந்த, ஸ்வை ஜிகியாங் என்ற 65 வயது நபர், நுரையீரலில் ஏற்பட்ட இழைநார் வளர்ச்சியால், 2 நுரையீரல்களும் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு, மூச்சு விட சிரமப்பட்டதை தொடர்ந்து, அவருக்கு 60 நாள்களாக செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்தது.

பல்வேறு மருத்துவமனைகளில் இருந்து, வரவழைக்கப்பட்ட சிறப்பு மருத்துவர்கள் மூலம், 8 மணி நேரம் நடைபெற்ற நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையை தொடர்ந்து, புதிதாக பொருத்தப்பட்ட நுரையீரல்கள் சீராக செயல்படத் தொடங்கியதால், அவர் தற்போது பூரண குணமடைந்துள்ளார்.

## நடமாட்டத்துக்கான கட்டுப்பாடு மலேசியாவில் ஜீன் 9 வரை நீடிப்பு



மலேசியாவில் பொதுமக்களின் நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு ஜீன் மாதம் 9ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில்கொரோனா பரவலை கட்டுப்படுத்த மார்ச் 18ஆம் தேதி முதல் கட்டுப்பாடு அமலில் உள்ளது.

அந்தக் கட்டுப்பாடு நாளை 12ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்தது. அதை தற்போதுமேலும்4வாரங்களுக்கு, ஜீன் 9ஆம் திகதி வரை நீட்டித்து பிரதமர் முகைதீன் யாசீன் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய அவர், பொதுமக்களின் அபிப்ராயம், சுகாதார அமைச்சகம் மற்றும் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு கட்டுப்பாட்டை நீடிப்பு செய்வதாக அறிவித்தார். மலேசியாவில் ஏற்கெனவே 3 முறை கட்டுப்பாடு நீடிக்கப்பட்டது. தற்போது அந்த கட்டுப்பாட்டை 4ஆவது முறையாக அரசு நீடித்துள்ளது.

## சவுதியிலுள்ள தன் ஆயுதங்களை திரும்பப் பெற அமெரிக்கா முடிவு

சவுதி அரேபியாவிலிருந்து பேட்ரியாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களை திரும்பப் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

1990 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கப் படைகள் சவுதியில் இருந்து வருகின்றன. அந்நாட்டின் விமான நிலையத்தையும், தங்கள் போர் விமான ஓடுதளமாக அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. இந்நிலையில் கடந்த ஆண்டு சவுதியின் ஆராம்கோ எண்ணெய் வயல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது பலத்தை அங்கு பெருக்கி வந்தது.

மேலும் ஈரானை மிரட்டவும் இந்தப் பகுதியை அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. ஆனால் தற்போது வளைகுடா பகுதியில் அமெரிக்கப் படைகள் இருப்பது தங்களுக்கு பலனளிக்காது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கருதுவதால் அப்பகுதியில் பெருமளவு ஆயுதங்களைத் திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.



# இலங்கை உரிய பாதையில் பயணிக்கிறது உலக சுகாதார ஸ்தாபனம் நற்சான்றிதழ்!

கொவிட் – 19ஐக் கட்டுப்படுத்துவதில், இலங்கை சரியான பாதையில் பயணித்துக்கொண்டிருப்பதாக, உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கண்காணிப்புகள், பரிசோதனைகள், தனிமைப்படுத்தல் உள்ளிட்ட சிகிச்சை உத்திகள் ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலம், கொவிட் – 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில், இலங்கை சரியான பாதையில் பயணித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கொவிட் – 19ஆல் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டமையை அடுத்து, அவர்களுடன் நெருங்கப் பழகிய நபர்களை பரிசோதனைக்கு உட்படுத்தியதன் மூலம், நோயாளர்களை விரைவில் அடையாளம் காண்பதற்கு வழி செய்யப்பட்டது.

கொவிட் – 19 நெருக்கடி இலங்கையில் ஏற்பட்டதையடுத்து, மே மாதம் 05ஆம் திகதி, அத்தியாவசிய ஆய்வுக்கூட உபகரணங்கள், வைத்தியசாலை உபகரணங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை, உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் கொவிட் – 19ஐக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய உபகரணங்களை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட கொள்முதலுக்கு 800,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டது. இதில், மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட சுகாதார பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விரைவான கண்காணிப்புக்கு ஆதரவு வழங்கும் பொருட்டும் சமூக கலக்கணிப்புகளை வலுப்படுத்துவதற்காகவும் பிராந்திய தொற்று நோயியில் நிபுணர்களுக்கு, தொழில்நுட்பக் கருவிகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

"இந்நிலையில், இந்த நோயைக் கட்டுப்படுத்தல், தணித்தல் பற்றிய விரிவான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, இன்னொருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவதைத் தடுக்கும் குறிக்கோளுடன், சரியான திட்டத்தை இலங்கை செயற்படுத்தி வருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடுவதை தவிர்க்குமாறு யாழ். மக்களுக்கு அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், மே. 11

யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்க்குமாறு மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறையில் நல்லிணக்க மையம் இன்று திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில வாரங்களாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது மக்கள் பட்ட இன்னல்களை நாமறிவோம்.

இலங்கையில் மட்டுமல்ல முழு உலக நாடுகளிலும் இந்த ஊரடங்கு நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த நிலைமையிலிருந்து விடுபட்டு மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில்தான் ஊரடங்கு சட்டத்தினை தளர்த்துவதென முடிவெடுத்துள்ளோம்.

எனினும் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தினாலும் பொதுமக்கள் கூட்டமாக வீதியில் இறங்குவதை நாங்கள் விரும்பவில்லை. தேவையானவர்கள் மட்டும் வீதிக்கு வாருங்கள். தேவையில்லாது வீதிகளில் பயணிக்காது தனித்திருத்தல் உங்களுக்கும் நல்லது உங்களுடைய சமூகத்திற்கும் நல்லது.

எனவே மக்கள் இதனை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தாலும் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடுவதை தவிருங்கள் - என்றார்.

## சீனாவுக்கு வெகுவிரைவில் இலங்கையின் புதிய தூதர்

கொழும்பு, மே 11

சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக எம்.சி. பேர்டினன்டோவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்து பெருந்தொகை வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வரும் நோக்கில் அவரை இந்தப் பதவிக்கு நியமிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எம்.சி. பேர்டினன்டோ, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் மின்வலு எரிசக்தி அமைச்சின் செயலராகக் கடமையாற்றியதுடன் பல முக்கிய பதவிகளை வகித்தார்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று குடியேறிய அவர், நல்லாட்சி அரசு கவிழ்ந்ததும் மீண்டும் நாடு திரும்பினார் எனத் தெரியவருகிறது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அலுவல்கள் வழமைக்கு

மட்டக்களப்பு, மே. 11

அரசின் அறிவித்தலுக்கமைவாக இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் அநேகமானவை வழமைக்கு திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் முடக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அலுவலங்கள் வழமையான பணிகளுக்காக திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களும் ஏனைய திணைக்களங்கள் நியதிச்சபைகள் கூட்டுத்தாபனங்கள் அத்தியாவசிய சேவை வழங்குனர்கள் ஆடைத்தொழில் சாலைகளும் மட்டக்களப்பில் இயங்கத் தொடங்கியுள்ளன.

அதனடிப்படையில் அலுவலகர்கள் கணிசமான அளவு வருகை தந்திருந்தனர் அலுவலக நுழைவாயிலில் பொதுமக்களுக்கான கைகழுவும் இடம் தயார்படுத்தப்பட்டுள்ளதுடன் வருபவர்களின் உடல் வெப்பநிலையினை பராமரிக்கின்ற சோதனைகளும் நடைபெறுவதுடன் அலுவலகத்திற்கு செல்பவர்கள் அனைவருக்கும் முகக்கவசங்கள் கட்டாயமாக அணிவதும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மட்டக்களப்பில் சகல அரசசேவைகளும் முழுமையாக செயற்படத் துவங்கியுள்ளதாகவும் அதனடிப்படையில் மட்டக்களப்பில் அரச அலுவலர்களுக்கு பாதுகாப்பு முகக் கவசங்கள், தொற்று நீக்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

அரச பணியாளர்களின் பாதுகாப்பிற்கான ஒரு தொகுதி சுகாதாரப் பொருட்கள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மாவட்ட செயலாளரிடம் இன்று திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikathir

புள்ளி மான்




நாளை (12/005/2020) தலைப்பு புள்ளி மான்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டுக்குள்: ‘டயஸ்போரா’வினரால் குழப்ப முடியாது!

## இராணுவத் தளபதி சவேந்திரா சில்வா நம்பிக்கை



கொரோனா வைரஸ் பரவலை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதெனத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, இந்த நிலைமைகளுக்கு மத்தியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் குழுவினர் நாட்டுக்குள் நுழைய முடியாதெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர் –

தற்போது சமூகத்துக்குள் தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்படவில்லை. கடற்படையினர், தனிமைப் படுத்தப்படுத்தல் முகாம்களுக்குள் உள்ளவர்கள் மாத்திரமே தொற்றுள்ளவர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

அக்குறணை, புத்தளம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தது தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள், தற்போது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு 6,340 பேர் தனிமைப் படுத்தல் முகாம்களிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், 37 தனிமைப்படுத்தல் முகாம்கள் தற்போதும் உள்ளனர். வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப் பட்டவர்களும் கடற்படையினருமே தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் .

இந்நிலைமைகளுக்கு மத்தியில் வெளிநாட்டுகளில் இருக்கும் டயஸ்போரா குழுவினர் நாட்டுக்குள் நுழைகின்றனர் எனக் கூறப்படும் தகவல்கள் உறுதியாகவில்லை. வெளிநாடுகளிருந்து வருவோர் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுகிறது.

அதனால், நாட்டுக்கு எதிரான குற்றங்களை செய்தவர்கள் நாட்டுக்குள் நுழைந்தால் அவர்களை அடையாளம் காண முடியும். புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விமான நிலையப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான, நிலைமைகளுக்கு மத்தியிலேயே நாட்டின் பல பகுதிகளில் இன்று வழமைக்கு திரும்ப உள்ளன. அதன்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக உரிய தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, சுகாதார படிமுறைகளை உரிய வகையில் கடைப்பிடிப்பது அவசியம். இந்த நிலைமைகளை தலைகீழாக மாற்ற ஒரு நபர் போதும் என்பதை கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# இரணைமடு முகாமிலிருந்து 175 பேர் இன்று விடுவிப்பு

*யாழ்ப்பாணம், மே. 11*

*கட்டாயத்தனிமைப்படுத்தல்நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த மேலும் ஒரு குழுவினர் இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.*

*இலங்கை விமானப் படையினரால் பராமரிக்கப்பட்டுவரும் இந்தத் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 175 பேர் அவர்களது சொந்த இடங்களுக்கு இன்றுகாலைஅனுப்பிவைக்கப்பட்டனர்.*

*தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு முன்னர் பி.சி.ஆர். சோதனைக்கும் அவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர் என இலங்கை விமானப் படையினர் தெரிவித்தனர்.*



## பிள்ளையானுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மே. 11

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அந்த வழக்கை எதிர்வரும் ஜுலை மாதம் 27ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமண நிகழ்வுகளுக்கும் வருகின்றது கட்டுப்பாடுகள்

இலங்கையில் திருமணம் செய்வதற்கு காத்திருப்போருக்கு சுகாதார அமைச்சு சுகாதார பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய திருமண தம்பதிகள் மற்றும் உறவினர் ஒருவரை கட்டிப்பிடித்தல், முத்தம் கொடுத்தல் மற்றும் கைகுலுக்கி கொள்வதைத் தவிர்த்து வேறு முறையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம்பிப்பதற்கு முன்னர் திருமண ஏற்பாடுகள் செய்து தடைப்பட்டவர்கள் மீண்டும் திருமணங்களை நடத்த முடியும். எனினும் அழைக்கப்பட்ட விருந்தினர்களின் பாதி பேர் மாத்திரமே மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சின் பிரதி இயக்குனர் நாயகம் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்துள்ளார்.

மண்டபத்திற்குள் வருபவர்கள் முக கவசங்களை அணிய வேண்டும். ஒரு மீற்றர் தூர இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். மண்டபத்திற்குள் நுழைவற்கு முன்னர் அனைவரையும் பரிசோதிக்க வேண்டும்.

மண்டபத்திற்குள் நுழையும் இடத்தில் நீர் வழங்குவதற்கான கருவிகளை பொருத்த வேண்டும். மண்டபத்திற்கு வருவதற்கு முன்னரும், மண்டபத்தில் இருந்து வெளியேரும் போதும் அனைத்து உபகரணங்களையும் தூய்மைப் படுத்த வேண்டும்.

நீர் பருகும் மற்றும் உணவு உண்ணும் தட்டுகள் விருந்தினர்களும் குடும்பத்தினரும் பயன்படுத்த கூடாது. உணவு பகிர்வதற்காக தனியாக ஒரு ஊழியரை நியமிக்க வேண்டும்.

அதன் மூலம் பலர் ஒரு தட்டுகள் பயன்படுத்துவதனை தவிர்க்க முடியும். ஒரு குழுவாக இணைந்து புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கும் தடை விதித்தல் ஆகிய பரிந்துரைகளை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வாகன வரிப்பத்திரம் வழங்கல் செயற்பாடுகள் மீள ஆரம்பம்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் நிமித்தம் வாகன வருமான உத்தரவுப்பத்திரம் வழங்கும் நடைமுறை நாடு முழுவதும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தற்போதைய அறிவுறுத்தலின்படி, வாகன வருமான உத்தரவுப்பத்திரம் வழங்கல் செயன்முறையானது இன்று திங்கட்கிழமை முதல் கல்முனை பிரதேச செயலக காரியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே உள்ள வழமையான நடைமுறைகளுக்கமைவாக வேலை நாள்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 3 வரையும் பொது மக்கள் தங்களது வாகன வருமான உத்தரவுப்பத்திரங்களை கல்முனை பிரதேசசெயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதேச செயலகத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் பொது மக்கள் முகக் கவசம் அணிதல், கைகளை நன்கு கழுவிக் கொள்ளுதல் மற்றும் சமூக இடைவெளியை பேணி நடத்தல் போன்ற வழக்கமான சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பேணிக்கொள்ள வேண்டும் என கல்முனை

பிரதேச செயலாளர், எம்.எம்.நஸீர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 24 மணி நேரத்தில் 799 பேர் கைதாகினர்

கொழும்பு, மே. 11

பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 799 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் 206 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மார்ச் 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் மொத்தமாக 51,552 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த காலகட்டத்தில் 13,350 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அந்த பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ரயிலில் ஒரேயொரு பயணி

கொழும்பு, மே. 11

ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்ட நிலையில் ரயிலில் பயணிப்பதற்காக பெலியத்தை ரயில் நிலையத்துக்கு ஒரு பயணி மாத்திரமே வந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஒன்றரை மாதங்களுக்கு பின்னர் இன்று காலை 5.10 மணிக்கு பெலியத்தையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகள் ரயில் இயக்கப்பட்டது.

அலுவலகங்களில் பணியாற்றும் நபர்கள் கொழும்பு செல்ல வசதியாக இந்த ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் பெலியத்தையில் இருந்து பயணிக்க மூன்று பேர் மாத்திரமே பதிவு செய்திருந்தனர்.

எனினும் பதிவு செய்த மூன்று பேர் இரண்டு பேர் வருகை தரவில்லை. ஒருவர் மாத்திரமே பெலியத்தையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துள்ளார்.

பதிவு செய்யாத சிலர் ரயிலில் பயணிக்கும் நோக்கில் ரயில் நிலையத்திற்கு வந்திருந்தனர்.

எனினும் அவர்களுக்குப் பயணிக்க அனுமதி வழங்காத ரயில் திணைக்கள அதிகாரிகள் அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

பயணிகளின் உடல் உஷ்ணத்தைப் பரிசோதித்து ஆசனங்களில் அமர செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ரயில் நிலையத்தின் பாதுகாப்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



## பஸ்களில் பயணிக்க விரும்பாதவர்கள் வாடகை வாகனங்களில் பயணிக்கலாம்

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்த இலங்கை இன்று முதல் வழமைக்கு திரும்புவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது, அதற்கமைய இன்றைய தினம் முதல் பஸ்களில் பயணிக்க விரும்பாதவர்கள் வாடகை வாகனங்களில் பணிக்கு செல்ல சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக பிரதி பொலிஸ்மாஅதிபர் அஜித்ரோஹன தெரிவித்துள்ளார்.

ஓட்டோக்களில் பயணிப்பவர்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. சாரதிக்கு மேலதிகமாக 2 பேர் மாத்திரமே ஓட்டோவில் பயணிக்க முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மோட்டார் வாகனங்களில் செல்பவர் என்றால் சாரதிக்கு மேலதிகமாக 3 பேர் மாத்திரமே பயணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அ'புரவில் ஒரே பிரசவத்தில் 4 சிசுக்களைப் பெற்ற தாய்

அநுராதபுரத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிறந்துள்ளன.

30 வயதுடைய பெண் ஒருவர் பேராதனை வைத்தியசாலையில் இந்தக் குழந்தைகளோ பெற்றெடுத்துள்ளார்.

இந்தப் பெண் கர்ப்பமடைந்து 8 மாதங்களும் ஒரு வாரமும் கடந்திருந்த நிலையில் அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகளைப் பிரசவிப்பதற்குப் பேராதனை வைத்தியசாலையின் வைத்தியர்கள் தீர்மானித்தனர்.

அதற்கமைய நேற்று வெற்றிகரமாக இந்த 4 குழந்தைகளையும் அத்தாய் பிரசவித்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

உலகளாவியரீதியில் நேற்று அன்னையர் தினம் கொண்டாப்பட்ட நிலையில், நான்கு குழந்தைகளை அத்தாய்பிரசவித்துள்ளமை சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.

## மன்மோகன் குணமடைய பிரார்த்திக்கிறார் மஹிந்த



கொழும்பு, மே. 11

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் திடீர் நெஞ்சு வலியால் எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்று இரவு அனுமதிக்கப்பட்டு அவருக்கு இதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய இலங்கை மக்கள் சார்பாக பிரார்த்திப்பதாக டுவிட்டரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மேலும் அவர் விரைவில் முழுமையாக குணமடைந்து வீடு திரும்புவார் என்று பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.05.2020 இல் வெளியிடப்பெற்றது.